முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (1.7.2024) முகாம் அலுவலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், ஹார்வார்ட் மருத்துவப் பள்ளி, புளூம்பெர்க் பொது மருத்துவப்பள்ளி போன்ற பல்வேறு மருத்துவப் பள்ளிகளில் தமிழ்நாடு அரசின் மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் பற்றி விளக்கவுரை அளிக்க அமெரிக்க நாட்டிற்கு செல்லவுள்ளதையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் டாக்டர் கே. நாராயணசாமி ஆகியோர் உள்ளனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.7.2024) தலைமைச் செயலகத்தில், ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதத்தில் பிரான்ஸ் நாட்டில் நடைபெறவுள்ள பாரீஸ் ஒலிம்பிக் மற்றும் பாரா ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொள்ள தேர்வாகியுள்ள தமிழ்நாட்டைச் சார்ந்த 5 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொள்வதற்கான முன்னேற்பாடுகளை மேற்கொள்வதற்காக சிறப்பு ஊக்கத்தொகையாக தலா 7 இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 35 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கி வாழ்த்தினார். இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (1.7.2024) முகாம் அலுவலகத்தில், மதுரை, தோப்பூர் அரசு காசநோய் மருத்துவமனையில் நிர்வாக அலுவலராக சிறப்பாக பணியாற்றி 30.6.2024 அன்று ஓய்வு பெற்ற மருத்துவர் காந்திமதிநாதன் அவர்கள் குடும்பத்தினருடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றதோடு, உலக மருத்துவர்கள் நாளையொட்டி தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தில் இன்றையதினம் நடைபெறவுள்ள விழாவில் தனக்கு சிறந்த மருத்துவருக்கான விருது வழங்கப்படவுள்ளதையொட்டியும் வாழ்த்துப் பெற்றார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை அவரது முகாம் அலுவலகத்தில் ஹஜ் பயணம் சென்று திரும்பிய தலைமை நிலையச் செயலாளர் துறைமுகம் காஜா சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

3 குற்றவியல் சட்டங்கள் அமல்!

புதிய குற்றவியல் சட்டங்களை ஒத்திவைக்க வேண்டும்!

டெல்லி பார் கவுன்சில், ஒன்றிய அமைச்சர் அமித்ஷாவிற்கு கடிதம்!

புதுடெல்லி, ஜூலை 2 - கடும் எதிர்ப்பையும் மீறி ஒன்றிய பா.ஜ.க. அரசு கொண்டுவந்த 3 புதிய குற்றவியல் சட்டங்களும் அமலுக்கு வந்துள்ள நிலையில், இந்த சட்டங்களை ஒத்திவைக்குமாறு டெல்லி பார் கவுன்சில் ஒன்றிய அமைச்சர் அமித்ஷாவிற்கு கடிதம் எழுதி உள்ளது. ஒன்றிய அரசின் 3 புதிய குற்றவியல் சட்டங்களில் ஏராளமான பிற்போக்கு விதிகள் உள்ளதாக முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம் விமர்சித்துள்ளார்.

இந்திய தண்டனைச் சட்டம், குற்றவியல் நடைமுறைச் சட்டம், இந்திய சாட்சியங்கள் சட்டம் ஆகிய சட்டங்களுக்குப் பதிலாக பாரதிய நியாய சன்ஹிதா பிஎன்எஸ், பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா, பாரதிய சாட்சிய அதினியம் ஆகிய 3 புதிய குற்றவியல் சட்டங்கள் ஒன்றிய அரசால் கொண்டுவரப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடரின்போது எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் இந்த புதிய சட்டங்களுக்கான மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டன. பின்னர் இந்த சட்டங்களுக்கு, குடியரசு தலைவர் ஒப்புதல் அளித்த பிறகு அரசிதழில் வெளியானது. 3 புதிய குற்றவியல் சட்டங்களும் நேற்று முதல் அமலுக்கு வந்துள்ளன. இந்நிலையில் ஒன்றிய அரசால் கொண்டுவரப்பட்ட புதிய குற்றவியல் சட்டங்களை ஒத்திவைக்குமாறு, உள்துறை அமைச்சர் அமித்ஷாவிற்கு டெல்லி பார்கவுன்சில் சார்பில் வழக்கறிஞர்கள் கடிதம் எழுதி உள்ளனர்.

இந்திய குடியரசு முன்னாள் துணைத் தலைவர்

எம்.வெங்கையா நாயுடு பிறந்த நாள்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, ஜூலை 2 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இந்திய குடியரசு முன்னாள் துணைத் தலைவர் எம்.வெங்கையா நாயுடு அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்து வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு: -

இந்திய குடியரசு முன்னாள் துணைத் தலைவர் எம்.வெங்கையா நாயுடு அவர்களுக்கு இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்.

உங்களுக்கு மகிழ்ச்சியும், ஆரோக்கியமான வாழ்க்கையும் அமைந்திட வாழ்த்துக்கள்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

வேலூர் விமான நிலையம் - விரிவாக்கம் செய்யப்பட்ட நிலையில்

மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர நடவடிக்கை எடுப்பீர்!

மக்களவையில் வேலூர் எம்.பி. கதிர் ஆனந்த் வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஜூலை 2- நாடாளுமன்ற மக்களவையில் நேற்று (1 ஜூலை 2024) விதி எண் 377 கீழ் நடந்த விவாதத்தில் தி.மு.க. வைச் சேர்ந்த வேலூர் மக்களவை தொகுதி உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த் ஒன்றிய அரசின் உடான் திட்டத்தின் வாயிலாக விரிவாக்கப்பட்ட வேலூர் விமான நிலையம் மக்கள் பயன்பாட்டிற்கு உடனடியாக கொண்டு வர வலியுறுத்தினார்.

அவர் வைத்த கோரிக்கை விபரம் கீழ்வருமாறு:-

எனது வேலூர் மக்களவைத் தொகுதி மக்களால் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட வேலூர் விமான நிலையத் திட்டம் பல கோடி ரூபாய் செலவழித்தும் இன்னும் பயன்பாட்டுக்கு வழியின்றி நிலுவையில் உள்ளது. அது எப்போது நிறைவேறும்? என்பது தமிழக மக்களின் குறிப்பாக எனது வேலூர் மக்களவைத் தொகுதி மக்களின் மனதில் நீடித்து வரும் மிக முக்கியமான கேள்வி.

2017 இல், UDAN விமான பிராந்திய இணைப்புத் திட்டத்தின் கீழ் தற்போதுள்ள சிறிய விமான நிலையத்தை பெரிய விமான நிலையமாக விரிவுபடுத்தும் திட்டம் அறிவிக்கப்பட்டது.

இந்த விமான நிலைய விரிவாக்கத்திற்கு, 360 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, பணிகள் முழுவீச்சில் துவங்கியது. ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட 700 மீட்டர் நீள ஓடுபாதை 850 மீட்டர் ஓடுபாதையாகப் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

வேலூர் தொகுதியில் உள்ள அனைத்து தரப்பு மக்களும் தங்கள் பல வருடங்களாக விமான நிலைய கனவு நிறைவேறும் என்று காத்திருக்கிறார்கள்.

ஆனால் சில விமானப் போக்குவரத்து துறை அதிகாரிகளின் அலட்சிய அணுகுமுறை காரணமாக நிலுவையில் உள்ள ஆய்வு பணிகள் நிறைவு பெறாமல் வேலூர் விமான நிலையம் இன்னும் மக்கள் பயன்பாட்டிற்கு வரவில்லை.

உடான் திட்டத்தின் கீழ் வேலூர் விமான நிலையத்தை விரைந்து முடிக்குமாறு சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சருக்கு கடிதம் வாயிலாகவும், நாடாளுமன்ற மக்களவையில் இது குறித்து கோரிக்கை எழுப்பியிருந்தேன்.

பிரதமர், நிதியமைச்சர் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அளித்த வாக்குறுதிகளை நியாயமான வகையில் நிறைவேற்றவும் வேலூர் விமான நிலையத்தை அமைப்பதற்கு டி.ஜி.சி.ஏ. மூலம் ஆய்வு செய்யவும் விரிவாக்கப்பட்ட வேலூர் விமான நிலையம் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர ஒன்றிய அரசை மீண்டும் ஒரு முறை வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு இன்று 18வது நாடாளுமன்ற மக்களவையில் நடந்த முதல் விவாதத்தில் தி.மு.க. நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த் நேற்று விதி எண் 377 கீழ் வேலூர் விமான நிலைய விரிவாக்க பணிகள் விரைவாக நிறைவேற்றப்பட்டு வேலூர் விமான நிலையம் உடனடியாக மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வர வலியுறுத்தினார்.

மருத்துவர்கள் நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, ஜூலை 2-

மருத்துவர்கள் நாளையொட்டி வாழ்த்துத் தெரிவித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

தொண்டுள்ளமும் அர்ப்பணிப்புணர்வும் கொண்டு சேவையாற்றி மக்களின் நன்மதிப்பைப் பெறும் மருத்துவர்கள் அனைவருக்கும் "மருத்துவர்கள் நாள்" வாழ்த்துகள்!

மதுரை தோப்பூரில் உள்ள அரசு காசநோய் மருத்துவமனையைத் தனது நிர்வாகத் திறனால் மேம்படுத்தி ஓய்வு பெற்றுள்ள மருத்துவர் காந்திமதிநாதன் அவர்களை நேரில் பாராட்டி மகிழ்ந்தேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள், தமது பதிவில் தெரிவித்துள்ளார்.

விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் காணை வடக்கு ஒன்றியத்தில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் கடையம் ஊராட்சியில் பணிக்குழு பூக்களை ஆய்வு செய்து பொதுமக்களிடம் வாக்கு சேகரித்தார். உடன் ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் கார்த்திகேயன், ஒன்றியச் செயலாளர் ஆர்.முருகன் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர்க் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள், தீர்மானக்குழுச் செயலாளர் மீ.அ.வைத்தியலிங்கம் அவர்களின் 85வது பிறந்தநாளினையொட்டி நேரில் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தார்.